


## வனவிலங்குகள் காடுகளிலேயே வாழட்டும்

# மிருகக்காட்சி சாலைகளை மூட வேண்டும்

## பினாங்கு பயனீட்டாளர் சங்கம் தகவல்





**● செ. குணாளன்**

பினாங்கு, செப். 8-

மிருகக்காட்சி சாலை கோட்பாடு என்பது பழைமையான காலம் கடந்த ஒரு கோட்பாடு என்று பினாங்கு பயனீட்டாளர் சங்கத் தலைவர் முகைதீன் அப்துல் காதர் தெரிவித்துள்ளார்.

ஆகவே நடப்பு நவீன காலத்தில் மிருகக்காட்சி சாலைகள் தேவையில்லை. அது மட்டுமன்றி இவற்றைப் பராமரிக்க மிகப்பெரிய தொகை தேவைப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வனவிலங்குகளின் வாழ்வாதாரம் சுரண்டப்படும் நிலையில் அவற்றை மிருகக்காட்சி சாலையில் அடைத்து வைப்பதன் நோக்கம் என்ன என்று அவர் கேட்டார்.

ஆகவே மிருகக்காட்சி சாலைகளின் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு காலம் கனிந்து விட்டது என்பது எங்களின் நிலைப்பாடு என்றார் அவர். ஏறத்தாழ 2,500 ஆண்டுகளுக்கு முன்பு மிருகங்களை அடைத்து வைக்கும் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. செல்வந்தர்கள் தங்களின் பெருமைகளை எடுத்துச் சொல்வதற்காக வகை வகையான மிருகங்களைக் கூண்டுகளில் அடைத்து வைத்திருந்தனர்.

வனவிலங்குகள் இயற்கையான முறையில் வாழ்வதற்கு அவற்றைக் காடுகளிலேயே விட்டு விட வேண்டும் எனவும் அவர் சொன்னார். கோவிட்-19 நெருக்கடியால் மிருகக்காட்சி சாலை மூடப்பட்டிருக்கும் நிலையில் அவற்றைத் தொடர்ந்து நடத்துவதில் பிரச்சினை ஏற்பட்டிருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

நுழைவுக் கட்டணம், வாடகை, நன்கொடையாளர்கள் போன்றவற்றைச் சார்ந்துதான் மிருகக்காட்சி சாலைகளின் செலவுகள் ஈடுகட்டப்படுகின்றன.

சீனாவில் இருந்து கொண்டு வரப்பட்ட இரண்டு பாண்டா கரடிகளை வளர்ப்பதற்கு 2012ஆம் ஆண்டில் 22 லட்சத்து 50 ஆயிரம் வெள்ளி செலவு ஏற்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்தத் தொகையில் ஏறத்தாழ 5 ஆயிரம் மற்ற விலங்குகளை வளர்த்து விடலாம் எனவும் அவர் கூறினார்.

தலைநகரில் உள்ள மிருகக்காட்சி சாலைக்கு மாதம் 10 லட்சம் வெள்ளி செலவு ஏற்படுகிறது. தொழிலாளர்களுக்கான சம்பளம், உணவு, குடிநீர், மின்சாரக் கட்டணம், துப்புரவுப்பணி ஆகியவற்றுக்கான செலவும் இதில் அடங்கும்.

நிதிப் பற்றாக்குறையால் மிருகக்காட்சி சாலையில் உள்ள மிருகங்கள் பட்டினியால் அவதிப்படுவதை விட அவற்றை மூடி விடுவதுதான் சிறந்த வழி என்று அவர் மேலும் சொன்னார்.

மிருகங்கள் தங்களின் இயல்பான வாழ்க்கைச் சூழலில் காடுகளிலேயே வளரட்டும். அவற்றைக் கம்பிக் கூண்டுகளில் அடைத்து வியாபாரமாக்கக்கூடாது. நவீன காலத்தில் மிருகங்களைப் பார்க்க விரும்புவோர் தொலைக்காட்சி வாயிலாகவும் கணினி போன்ற கருவிகளிலும் பார்த்து விடுகின்றனர் என்று குறிப்பிட்ட அவர், மிகப் பழைமையான கோட்பாடுகள் அடிப்படையில் அமைந்த மிருகக்காட்சி சாலைகளை மூடுவதற்கு நேரம் வந்து விட்டது என்றார்.

## பினாங்கில் 10 தடுப்பூசி மையங்கள்

# நேரில் சென்று தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம்



ஜார்ஜ்டவுன், செப். 8-

இன்று தொடங்கி பினாங்கு மாநிலத்தில் உள்ள 10 தடுப்பூசி மையங்களில் பினாங்கு மக்கள் முன் பதிவு இன்றி நேரில் சென்று தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம். பினாங்கில் கோவிட்-19 அதிகரிப்பைக் கட்டுப்படுத்து வதற்கு இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. 18 வயதுக்கு மேற்பட்ட உள்ளூர் மக்களும் மைசெஜாத்ரா செயலி மூலம் இன்னும் பதிவு செய்து கொள்ளாத பிரஜைகளும் அங்கு சென்று தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம்.

பினாங்கு மாநிலத்தில் தடுப்பூசித் திட்டத்தைத் தீவிரப்படுத்தும் சுகாதார அமைச்சின் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த மாத இறுதிக்குள் 10 லட்சம் சொட்டு தடுப்பூசியை பினாங்கு மாநிலம் பெறும். தற்போது கோவிட்-19 மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மாநிலமாக பினாங்கு உள்ளது.முதலில் வருவோருக்கு தடுப்பூசி எனும் அடிப்படை யில் இன்று தொடங்கி இந்த மையங்களில் தடுப்பூசி போடப்படும் என்று பினாங்கு முதல்வர் சௌ கோன் இயோ தெரிவித்தார்.

ஸ்பைஸ், தாப்பாக் பெஸ்தா சுங்கை நிபோங் காம்ப்ளெக்ஸ் சுக்கான், பாலிக் பூலாவ், பூசாட் கான்வென்ஷன்ஸ் பெர்டா, டேவான் மில்லினியம், எஸ்பி அரினா, தாப்பாக் எக்ஸ்போ செபெராங் ஜெயா, வங்கோ எமிலண்ட் டேவான் சுங்கை பாக்காப், டேவான் செர்பகுணா ஜாவி ஆகிய மையங்களில் இன்று காலை 10.00 மணி தொடங்கி நேரில் சென்று தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம் என்று அவர் சொன்னார். வீட்டில் தனிமைப் படுத்தப்பட்டிருப்போர் கோவிட்-19 தொடர்பில் கேட்கும் ஐயப்பாடுகளுக்கு 24 மணி நேரம் முதல் 48 மணி நேரத்திற்குள் பதிலளிக்கும் வகையில் மாநில சுகாதாரத்துறை சேவையை மேம்படுத்தும் என்றும் அவர் விவரித்தார்.

சிறப்பு கோவிட்-19 மதிப்பீட்டு மையம் 04-3827143, 04-3827142 ஆகிய தொலைபேசி சேவைகள் மூலம் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் புகார்களை உடனடியாகக் கவனிக்கும்.

## கோவிட்-19 நோயாளிகளை நிராகரிப்பது

# ஆபத்தை விளைவிக்கும்



ஜோகூர்பாரு, செப். 8-

மிகக்கடுமையான பாதிப்பு இல்லாத கோவிட்-19 நோயாளிகளை ஏற்றுக்கொள்ள அரசு மருத்துவமனை மறுக்கும் நடவடிக்கையானது நோயாளியின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம் என்று ஜோகூர் ஜசெக மத்திய செயலவை உறுப்பினர் டாக்டர் பூ தெரிவித்தார்.

கோவிட்-19 சுய பரிசோதனை செய்து கொண்ட ஒரு நோயாளிக்கு கோவிட்-19 தொற்று உறுதி செய்யப்பட்டது. அவருக்கு ஒரு வாரம் லேசான காய்ச்சலும் மூச்சுத் திணறலும் இருந்திருக்கின்றது. இந்த நோயாளியின் ஆக்சிஜன் அளவு 95 விழுக்காடாக இருந்த போதிலும் உடற்பயிற்சி செய்த பிறகு அது 92 விழுக்காடாகக் குறைந்திருக்கின்றது.

ஆகவே சுகாதார அமைச்சின் வழிகாட்டியின் கீழ் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று டாக்டர் பூ தெரிவித்தார்.

அந்த நோயாளிக்கு நிமோனியா காய்ச்சலுக்கான அறிகுறி இருந்தது. அவர் 3ஆம் கட்ட கோவிட்-19 நோயாளி என்பது தெரிந்த பிறகும் அவரை மருத்துவமனையில் சேர்த்துக் கொள்ள அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அந்த நோயாளி பின்னர் தனியார் மருத்துவமனையில் நிபுணத்துவ சிகிச்சை பெற்றுள்ளார்.

ஆகவே கோவிட்-19 நோயாளிகளை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிப்பதே சிறந்த வழியாகும் என்று அவர் மேலும் சொன்னார்.

## உண்டி 18 திருத்தங்களை

# அமல்படுத்தத் தயாராவீர்




புத்ராஜெயா, செப். 8-

இந்த ஆண்டு டிசம்பர் 31ஆம் தேதிக்குள் உண்டி 18 திருத்தங்களை (18 வயதில் வாக்களிப்பது) அமல்படுத்தத் தயாராக இருக்கும்படி தேர்தல் ஆணையத்திற்கு புத்ராஜெயா உத்தரவிட்டுள்ளது என்று சட்டத்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ வான் ஜுனாய்டி துவாங்கு ஜபார் நேற்று கூறினார்.

இந்த விஷயம் தொடர்பில் கூச்சிங் உயர் நீதிமன்றம் பிறப்பித்த ஆணையை புத்ராஜெயா கடைப்பிடிக்கும் என்று அவர் மேலும் சொன்னார்.

ஆனால் உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்வதா அல்லது இல்லையா என்பது பற்றி அரசாங்கம் இன்னும் முவு செய்யவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நாங்கள் மேல் முறையீடு செய்வது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை. சட்டத்துறைத் தலைவருடனும் அமைச்சரவையுடனும் இதுபற்றி விவாதிப்போம் என்று அவர் மேலும் சொன்னார்.

டிசம்பர் 31ஆம் தேதிக்குள் உண்டி 18 திருத்தங்களை அமல்படுத்த தயாராகும்படி தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிடப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். உண்டி 18 திருத்தங்களை அமல்படுத்தும்படி சில தினங்களுக்கு முன்பு கூச்சிங் உயர் நீதிமன்றம் அரசாங்கத்திற்கு ஆணையிட்டிருந்தது.

SA